மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் உசிலம்பட்டி.
முன்னிலை: திரு.G. சத்தியநாராயணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ)
2025ம் ஆண்டு ஜுன் மாதம் 17ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.114/2023**

கருப்பையா ... வாதி

// எதிர் //

பாண்டி ... பிரதிவாதி

இவ்வழக்கானது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.P.V.K. ஜெயச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிக்கு அழைப்பாணை அனுப்பி சார்பு செய்யப்பட்டு, பிரதிவாதி அழைத்தும் ஆஜராகாததால் அவருக்கு எதிராக வழக்கு ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வழக்கில் கடந்த 13.06.2025ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பு வாதுரையைக் கேட்டறிந்தும், வழக்குரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான கூட்டு அனுபவத்திற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, அவரது முகவரோ எந்தவிதமான தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்றும், தாவாச் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இவ்வழக்கின் செலவு தொகைகளைப் பிரதிவாதி வாதிக்கு வழங்கிட கோரியும், வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>பிராதின் சுருக்கம்</u> :**

தாவாச் சொத்து போத்தம்பட்டி பஞ்சாயத்து மூப்பப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது என்றும், தாவா இடத்திற்கு அருகில் பிரதிவாதியின் தோட்டம் உள்ளது என்றும், தாவாச் சொத்து வாதியின் பெற்றோருக்கு ஆதியிலிருந்து கிடைக்கப்பெற்று ஆண்டு அனுபவித்து வந்த சொத்து என்றும், வாதியின் பெற்றோர் காலமான பின்னர் வாதி தாவாச் சொத்தை அடைந்து அனுபவம் செய்து வந்தார் என்றும், தாவாச் சொத்திற்கு வாதியின் தாயார் லட்சுமியம்மாள் பெயரில் பட்டா உள்ளது என்றும்,

பிரதிவாதியானவர் தாவாச் சொத்தை வாதியிடம் குறைந்த விலைக்கு கிரையத்திற்கு கேட்டதை வாதியானவர் கிரையம் கொடுக்க மறுத்துவிட்டதால் பிரதிவாதியானவர் வாதியின் மீது வன்மம் கொண்டு வாதியின் அனுபவத்திற்கு இடையூறு செய்து வந்தார் என்றும்,

பிரதிவாதி வாதிக்கு பாத்தியமான தாவாச் சொத்துக்குள் இடையூறு செய்து வந்த வேளையில் 20.05.2023ம் தேதியன்று அடியாட்களுடன் அத்துமீறி நுழைந்து வாதியைத் தாவாச் சொத்துக்குள் அனுபவம் செய்யவிடாமல் அடாவடித்தனமும், அட்டுழியமும் செய்ததை வாதி ஊர்பெரியோர்கள் துணையுடன் தடுத்து நிறுத்திவிட்டார் என்றும், ஆனால் பிரதிவாதி வாதியைப் பார்த்து தாவாச் சொத்தைப் பிரதிவாதிக்கு விற்பனை செய்துவிடு இல்லையென்றால் தாவாச் சொத்தில் வாதியின் அனுபவம் செய்யமுடியாது என்று வர்மித்து சென்றதால் தாவாச் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதி தரப்பில் அழைப்பாணை அனுப்பி அழைத்தும் ஆஜராகாததால் அவருக்கு எதிராக வழக்கு ஒருதலைபட்சமாக்கப்பட்டது.

<u>3. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :

வாதி தரப்பில், வாதி கருப்பையா என்பவர் வா.சா.1ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலமாக வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4. தீர்வுக்குரிய பிரச்சனை:**

வாதி தரப்பு வழக்கறிஞர் வழக்கு குறித்து வாதிடுகையில், தாவாச் சொத்து வாதியின் பெற்றோருக்கு ஆதியில் கிடைக்கப்பெற்று அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், அவர்கள் காலத்திற்கு பின்னர் வாதி அனுபவம் செய்து வந்தார் என்றும், தாவாச் சொத்தினைப் பிரதிவாதி குறைந்த விலைக்கு வாதியிடம் கிரையம் கேட்டதற்கு வாதி கொடுக்க மறுத்துவிட்டதால் தாவாச் சொத்தில் வாதியின் அனுபவத்தில் இடையூறு செய்து வந்ததால் தாவா வழக்கினைத் தாக்கல் செய்து வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை வாதி சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதாக வாதிடப்பட்டது.

5. இவ்வழக்கின் வாதி தரப்பில் வாதி வா.சா.1ஆக சாட்சியமளித்து தாவாச்

சொத்திற்கு வாதியின் தாயார் பெயரில் உள்ள பட்டா நகல் வா.சா.ஆ.1ஆகவும், தாவாச் சொத்தைக் காட்டக்கூடிய வரைபடத்தின் நகல் வா.சா.ஆ.2ஆகவும், வாதி பெயரில் உள்ள ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.3ஆகவும் தாக்கல் செய்து மேற்படி சான்றாவணங்களின் அடிப்படையில் வாதி வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபித்துள்ளார் என்றும், எனவே, வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரமானது வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று வாதிடப்பட்டது.

6. இந்நிலையில், வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்துரைக்கும் விதமாக பிரதிவாதி தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை எதுவும் தாக்கல் செய்யாமல், எந்தவிதமான வாய்மொழி சாட்சியமும் அளிக்காமல், ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் பிரதிவாதி தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வண்ணம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

7. மேலும், வாதி தரப்பு சாட்சியங்களில் இருந்தும், ஆவணங்களில் இருந்தும் வாதி தரப்பு வழக்கை வாதி நிரூபணம் செய்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆக வாதி கோரியுள்ள நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு அனுமதிக்கப்பட்டு, தாவாச் சொத்தில் வாதியின் அமைதியான கூட்டு அனுபவத்திற்கு பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, அவரது முகவரோ எந்தவிதமான தடையோ, இடைஞ்சலோ செய்யக்கூடாது என்றும், தாவாச் சொத்தினை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்யக்கூடாது என்றும் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு வழங்கி இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்படுகிறது.

செலவு தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 17.06.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்)G. சத்திய நாராயணன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ)
உசிலம்பட்டி.

1. <u>வாதி தரப்பு சாட்சிகள்</u> :

வா.சா.1. கருப்பையா

2. **<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :**

வா.சா.ஆ.1. வாதியின் தாயார் பெயரில் உள்ள பட்டா நகல்

வா.சா.ஆ.2. 22.05.2023ம் தேதிய வரைபடம் நகல்

வா.சா.ஆ.3 வாதியின் ஆதார் அட்டை நகல்

3. **<u>பிரதிவாதி தரப்பு சாட்சி</u> :** இல்லை.

4. **<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :** இல்லை.

5. **<u>நீதிமன்ற சாட்சிகள்</u> :** இல்லை.

6. **<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u> :** இல்லை.

7. **<u>சாட்சிய சான்றாவணங்கள்</u> :** இல்லை.

(ஒம்)G. சத்திய நாராயணன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ)
உசிலம்பட்டி.

உண்மை நகல்

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1(முகூபொ),
உசிலம்பட்டி.

அசல் வழக்கு எண்.114/2023

**செவ்வை – தீர்ப்புரை**

நாள்: 17.06.2025